விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதலாவது நாளிதழ்
Eelanadu
01.08.2020 சனிக்கிழமை

## சி.ஐ.டி. முன்னாள் பணிப்பாளர் கைது!



குற்றப்புலனாய்வுத் துறையின் (சி.ஐ.டி.) முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

ஆயுத வழக்கில் சாட்சியங்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டிலேயே கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக மீண்டும் தன்னை நியமிக்க வேண்டி உச்ச நீதி மன்றில் வழக்கு ஒன்றை அவர் தாக்கல்

02




# கறுப்பு உடை இராணுவத்தால் எனது உயிருக்கு அச்சுறுத்தல்

### அஞ்சமாட்டேன் என்று ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் கடிதம்



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 01

முழுக்கறுப்பு சீருடை அணிந்த இராணுவத்தினர் தனது தேர்தல் பிரசாரத்தை குழப்பும் வகையிலும் - அச்சுறுத்தும் வகையிலும் நடந்து கொண்ட சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் விக்னேஸ்வரன்.

02

## விக்கியிடம் சொத்து, பணம் எவ்வளவு உள்ளன தெரியுமா?

யாழ்ப்பாணம், ஓக. 01

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரனிடம் 44 இலட்சத்து 24 ஆயிரத்து 724 ரூபா 24 சதம் உள்நாட்டிலும், வெளிநாட்டில் 9 ஆயிரத்து 618. 98 பவுண்ட்ஸ் (நம் நாட்டு மதிப்பில் 23 இலட்சத்து 49 ஆயிரத்து 303 ரூபா 94

02

### கொரோனா தொற்று

## யாழில் உறுதியானவருக்கு கொழும்பில் இல்லையாம்!

யாழ்ப்பாணம், ஓக. 01

கொரோனா தொற்று இருப்பதாக யாழில் இடம்பெற்ற பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டவருக்கு, கொழும்பில் நடத்தப்பட்ட சோதனைகளில் தொற்று இல்லை என்று முடிவு கிடைத்திருப்ப தாக வடக்கு மாகாண சுகாதார

02

## மக்களின் அடிப்படை உரிமைகளை 19 ஆம் திருத்தம் ஒழித்து விட்டாதாம்

### மஹிந்த கண்டுபிடிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 01

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லாதொழித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி துரதிஷ்டவசமாக ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்ததன் காரணமாகவே பொதுஜன பெரமுன என்ற புதிய கட்சியை ஸ்தாபித்தோம். எமது கட்சி தொடர்ந்து பலப்படுத் தப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். கண்டி நகரில் இடம் பெற்ற துறைசார் நிபுணர் களின் சந்திப்பில் கலந்துக்

02

## என்னை நம்புங்கள் ஏமாற்ற மாட்டேன்

### முஸ்லிம்களுக்கு சம்பந்தன் உறுதி



திருகோணமலை, ஓக. 01

முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம்களுக்காக சிந்திக்காது தமது பதவிகள் குறித்து மட்டுமே சிந்திக்கின்றனர். ஆனால் நாம் தமிழ், முஸ்லிம் மக்கள் குறித்து சிந்திக்கிறோம். முஸ்லிம் மக்கள் எம்மை நம்பினால் எமக்கான ஆதரவை தாருங்கள். முஸ்லிம் சமூகத்தை ஒருபோதும் நாம் ஏமாற்ற மாட்டோம் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

புல்மோட்டை வட்டார தமிழ்

02

## அர்ப்பணிப்பு மிகுந்த கட்சிகளை தெரிவு செய்க

### பல்கலை. மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஓக. 01

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக் கும் அர்ப்பணத்தோடு இருக்கும் கட்சிகளைத் தெரிவு செய்யுங்கள் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் மக்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக நேற்று ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது.

02




## பொதுஜன பெரமுன வேட்பாளருக்கு மரண தண்டனை

கொழும்பு, ஓக. 01

முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் - இரத் தினபுரி வேட்பாளருமான பிரேமலால் ஜயசேகர உட்பட மூவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் மரணதண்டனை

02






## அர்ப்பணிப்பு மிகுந்த...

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு, “தமிழ் மக்களின் ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் நாம் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொள்கின்றோம்.

இன்றைய நிலையில் தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் பெருமளவில் உருத்திரண்டுள்ளன. இலங்கை ஒரு பௌத்த, சிங்கள தேசம் என்பதை உறுதிப்படுத்துவதில் அவை முனைந்து நிற்பது வெள்ளிடை மலையாக உள்ளது.

வடக்கிலே தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் சமய, சாதிய முரண்பாடுகளையும் போரின் பின்னான வறுமை நிலையையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் களத்தில் காலூன்றிவிட வேண்டும் என்ற பெருவிருப்போடு தென்னிலங்கைக் கட்சிகளும் வட,கிழக்கிலுள்ள அவர்களின் முகவர்களும் களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இருந்து செயற்படுவதாக சொல்லும் கட்சிகள், கட்சிகளுக்குள்ளான உட்பூசல்களாலும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளாலும் பிளவுண்டு சிதறுண்டவைகளாக இத்தேர்தலை எதிர்கொள்கின்றன.

இன்றைய சூழ்நிலை பெரும் விரக்தி தருவதாக அமைந்திருப்பதால் தமிழ் மக்களாகிய நாம் தேர்தலில் ஆர்வம் காட்டாமல் ஒதுங்கிவிடவோ அல்லது சலுகைகளை பிரசாரம் செய்யும் கட்சிகள் பக்கம் சாய்ந்துவிடவோ உந்தப்படலாம். அது தவறு என்பதை நாம் தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

எனவே, விரக்தி மன நிலையில் இருந்து விலகி வாக்களிக்க முன்வாருங்கள். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அர்ப்பணத்தோடு இருக்கும் கட்சிகளைத் தெரிவு செய்யுங்கள். கட்சி, எல்லைகளுக்கப்பால் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அஞ்சாமல் குரலெழுப்பக்கூடிய ஆளுமைகளை அடையாளம் கண்டு வாக்களியுங்கள்!

இதன்மூலம், தேர்தலுக்கு முன்பு எம்மால் எட்டப்பட முடியாமல் போன ஒற்றுமையை தேர்தலின் பின்னாவது செயற்படு தளத்தில் எட்டமுடியுமென்று நாம் நம்புகின்றோம்.

30 ஆண்டு கால போராட்டத்தில் நாம் இழந்தவை பெரிது. அவற்றின் கைமாறு இன்றில்லாவிட்டாலும் என்றாவது கிட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருப்போம்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறுப்பு உடை...

அந்தக் கடிதத்தில், இத்தகைய செயற்பாடுகளினால் என்னை அச்சப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமருக்கும், தேர்தல்கள் ஆணையாளருக்கும் இந்த கடிதத்தின் நகல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், தேர்தல் காலத்தில் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் அதில் வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

(2020 ஜூலை 28) அன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி வியப்புக்குரியது. யாழ்ப்பாணம் குருநகரில் இரவு 8 மணியளவில் நான் தேர்தல் பிரசார மேடையில் இருந்த போது, முழுக் கறுப்புச் சீருடை அணிந்த 14 இராணுவத்தினர் (கறுப்புப் பூனைகள்?) மோட்டார் சைக்கிள்களில் வண்டிக்கு இருவராக கூட்ட அரங்கிற்குள் தடதடவென்று பெரும் சத்தத்துடன் நுழைந்தனர். வாகன எஞ்சின்களை அலறவிட்டுத் தொல்லை கொடுத்தனர். நான் புறப்படும் வரை காத்திருந்தனர். பிறகு என் கார் புறப்பட்ட போது 14 ஆட்களுடன் 7 மோட்டார் சைக்கிள்களுடன் என் காரைச் சுற்றிச் சுற்றி வந்தனர். கொஞ்ச நேரம் ஓரத்தில் நின்றுவிட்டு என் கார் செல்லும் பாதையில் குறுக்கிட்டனர்.

பிறகு ஒரே வரிசையில் சென்று ஒரு பக்கச் சந்தில் போய் மறைந்தனர். என் காவல் பொலிஸார் என்னுடன் காருக்குள்ளேயே இருந்தனர். இந்த, இராணுவத்தினர் எனக்கு எதையாவது உணர்த்த விரும்பினார்களா என்று தெரியவில்லை.

தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் என்னைப் போன்ற வயதான ஒருவரை மிரளச் செய்து விட மாட்டா என்று போதிலும் மக்களுக்குத் தவறான செய்தியை வழங்கி வாக்களிப்பு நடைமுறையை பாதிக்கக்கூடும்.

இந்தச் சம்பவம் குறித்துப் புலனாய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். வட மாகாணத்தில் 2020 நாடாளுமன்றத் தேர்தல் இராணுவத்தின் இருப்பினால் பாதிப்பு ஏற்படாமல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறும் என நம்புகிறேன்.

## மக்களின் அடிப்படை...

கொண்டு கருத்துரைக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ராஜபக்ஷக்களின் உரிமைகளை மறுப்பதற்காகவே அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நல்லாட்சி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. இத்திருத்தத்தினால் சாதாரண மக்களின் அடிப்படை உரிமைகள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கத்தில் இந்த தவறு திருத்திக் கொள்ளப்படும்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி துரதிஷ்டவசமாக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்ததன் காரணமாவே புதிய கட்சியை உருவாக்கினோம். இழக்கப்பட்ட உரிமைகளை ஜனநாயக ரீதியில் முறையாக பெற்றுக் கொண்டுள்ளோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை தடுப்பதற்கு கடந்த அரசாங்கம் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பாரிய சூழ்ச்சிகளை முன்னெடுத்தது. அனைவரது முயற்சிகளும் தோல்வியடைந்தது. 69 இலட்ச மக்கள் ஜனநாயக ரீதியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

புதிய அரசாங்கத்தில் துரிதமாக ஆற்ற வேண்டிய விடயங்கள் பல உள்ளன. அரசியலில் சிறந்த தேர்ச்சி மிக்கவர்களையும், நாட்டுக்கு சேவையாற்றும் இளம் தலைமுறையினரையும் மக்கள் பாராளுமன்றத்திற்கு இம்முறை தெரிவு செய்ய வேண்டும் என்றார்.

## சி.ஐ.டி. முன்னாள்...

செய்திருந்தார். இந்த வழக்கை நேற்று முன்தினம் அவர் மீளப் பெற்றிருந்தார். இதைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அபேசேகர தெற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்தை அவர் தேசிய பொலிஸ் ஆணையம் அங்கீகரித்திருந்தது.

கடந்த ஆட்சிக் காலத்தில், இப்போது ஆட்சியாளர்களாக இருப்பவர்கள் சம்பந்தப்பட்ட பல உயர் வழக்குகளை அபேசேகர விசாரித்திருந்தார். இதற்காகவே அவர் பழிவாங்கப்படுகிறார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

## விக்கியிடம் சொத்து...

சதம்), ஆயிரத்து 210.33 டொலர்கள் (2 இலட்த்து 24 ஆயிரத்து 736 ரூபா 86 சதம்) பணம் வங்கிகளில் வைப்பாக உள்ளது.

இது தவிர, சண்டிலிப்பாய் இரட்டையபுலத்தில் ஒரு துண்டுக் காணியும், கொழும்பு 7 இல் அவர் வசிக்கும் வீட்டின் மீது சீவிய உரித்தாக சொத்துக்களும் உள்ளன. இவை தவிர அவரிடம் எந்த வகை வாகனங்களும் சொந்தமாக இல்லை என்று விக்னேஸ்வரன் நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்பாக தனது சொத்து விபரங்களை பொதுமக்களுக்கு அறிவிப்பதாக அவர் கூறியிருந்தார். இதன்படியே அவர் தனது சொத்து விபரங்களை ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அவர் அனுப்பிய அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

நீதிபதியாகவும், நீதியரசராகவும் பணி புரிந்தகாலத்தில் விக்னேஸ்வரன் உழைத்த பணமும் முதலமைச்சராகப் பணி ஆற்றிய காலத்தில் அவருக்குக் கிடைத்த வேதனத்தில் ஏற்பட்ட சேமிப்பும் இவற்றுள் அடங்கும்.

இதேவேளை, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வேட்பாளர்களின் சொத்து விபரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டு இல. 232, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை பார்க்க விரும்புபவர்கள் தேர்தலின் பின்னர் முன் அனுமதி பெற்று அவற்றை பார்வையிடலாம். பாதுகாப்பு காரணங்களுக்காக தேர்தலில் வெற்றி பெறுபவர்களின் சொத்து விபரங்கள் மாத்திரமே பகிரங்கப்படுத்தப்படும் என்றும் சில தினங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி அறிவித்திருந்த போதிலும் நீதியரசர் விக்னேஸ்வரன் தனது சொத்து விபரங்களை தேர்தலுக்கு முன்னரேயே மக்களுக்கு பகிரங்கப்படுத்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## என்னை நம்புங்கள்...

அரசு கட்சியின் கிளைத்தலைவர் கலீல் தலைமையில் புல்மோட்டையில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

சிறுபான்மை மக்கள் மிகவும் பிரச்னைக்குரிய காலத்தில் வாழ்கின்றோம். எமக்கு எதிராக பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு தமிழர் பிரதேசங்களை கைப்பற்றுவதற்கும் மாற்றியமைக்கவும் பல்வேறு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விடயங்கள் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். அதிகாரம் எம்மிடம் இருந்தால் மட்டுமே இந்த சதிகளை முறியடிக்க முடியும். தொல்பொருள் என்ற பெயரில் கிழக்கில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் மிக மோசமான பாதிப்பு முஸ்லிம் மக்களுக்கே ஏற்பட்டு வருகின்றது. முஸ்லிம்களின் நிலைமைகள் குறித்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிந்திக்கின்றது. முஸ்லிம்கள் நினைத்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஆதரவு தாருங்கள். முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம்களுக்கான சிந்திக்காது அவர்களின் பதவிகள் குறித்து மட்டுமே சிந்திக்கின்றனர். ஆனால் நாம் மக்கள் குறித்து சிந்திக்கிறோம். சமூகங்களுக்கு இடையில் புரிந்துணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். முஸ்லிம் மக்களுக்காக நாம் கிழக்கின் முதலமைச்சர் பதவியைக்கூட விட்டுக்கொடுத்தோம். சமூக நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் நாம் அந்த விட்டுக்கொடுப்பை முன்னெடுத்தோம். இந்த பாராளுமன்ற தேர்தலில் முஸ்லிம் சமூகம் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இந்த நாட்டில் தீர்வு குறித்து பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்றன. யுத்தம் ஒன்று இடம்பெற்றது, அதற்கு முன்னரும் பின்னரும் பேச்சுக்கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் ஆரம்பத்தில் இருந்து நாம் மட்டுமே இந்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். நாம் தேர்தலுக்காக மட்டும் செயற்படும் கட்சி அல்ல. இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஏற்ற அதிகார பகிர்வு வழங்கப்பட்டு அரசியல் அமைப்பில் நிலையான தீர்வு ஒன்றினை உருவாக்கிக்கொடுக்க வேண்டும். அதனை அடைவதற்கான வாய்ப்புகள் இன்று நெருங்கிக்கொண்டு உள்ளது. அதேபோல் மக்களின் தீர்மானம் இந்த தேர்தலில் வெளிப்பட்டாக வேண்டும். பாராளுமன்றத்தில் நாம் பலமான அணியாக இருக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நாடு பூராகவும் நாம் சிறுபான்மை மக்களாக இருந்தாலும் கூட வடக்கிலும், கிழக்கிலும் நாம் தான் பெரும்பான்மையாக வாழ்கின்றோம். எனவே நாம் இரு சமூகமும் ஒற்றுமையாக செயற்பட்டால் எமக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

## பொதுஜன பெரமுன...

விதித்து நேற்று தீர்ப்பளித்தது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது கஹவத்தையில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பாக இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரேமலால் ஜயசேகர போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில்...

சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில், வெளிநாட்டிலிருந்து வந்து விடத்தல்பளை தடுப்பு முகாமில் இருந்த ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவ பணியாளர்கள் நால்வர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். இதேபோன்று அங்கு சிகிச்சை பெற்ற 76 நோயாளர்களையும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த பணிப்பு விடுக்கப்பட்டது.

இந்நிலையில், முன்னதாக கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபருக்கு கொழும்பில் இரு தடவைகள் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று நேற்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதையடுத்து அவர் சிகச்சையில் இருந்தும் - தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றும், இதேபோல 76 நோயாளர்களுக்கும் விடுக்கப்பட்ட சுய தனிமைப்படுத்தல் பணிப்பு மீளப் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,815 | 01 | 413 | 48 | 2,391 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

ஈழநாடு
Eelanadu
01.08.2020 சனிக்கிழமை
சார்வரி, ஆடி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## விலகிச் செல்கின்றதா கிழக்கு?

எல்லோருமே யாழ்ப்பாணத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருக்கும் போது கிழக்கு மெதுவாக தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்கின்றதா என்னும் கேள்வி எழுகின்றது. வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில், தமிழ்த் தேசியத்தை முன்னிலைப் படுத்தி கட்சிகள் மோதிக் கொள்கின்றபோது, கிழக்கிலோ உரிமையா அல்லது அபிவிருத்தியா என்னும் அடிப்படையில் கட்சிகள் மோதிக் கொள்கின்றன. கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பிரதான கட்சி. யாழ்ப்பாணத்தில் மோதிக்கொள்ளும் மாற்றுத் தரப்புக்கள் எவையும் கிழக்கில் பலமாக இல்லை.

இவ்வாறானதொரு நிலையில், கிழக்கின் தேர்தல் போட்டியானது, கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்தோடு இணைந்து அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டை கொண்டிருப்பவர்களுக்கும் இடையிலான போட்டியாகவே மாறியிருக்கின்றது. மட்டக்களப்பை பொறுத்தவரையில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சியடைந்திருக்கின்றது. பிள்ளையான் தொடர்பான பல்வேறு விமர்சனங்களையும் தாண்டி எவ்வாறு அவர்களது செல்வாக்கு அதிகரித்தது? இதேபோன்று இம்முறை அம்பாறையில் போட்டியிடும் விடுதலைப் புலிகளின் முன்னைநாள் மட்டு. அம்பாறை மாவட்ட தளபதி விநாயகமூர்த்தி முரளிதரனின் (கருணா அம்மான்) செல்வாக்கும், கூட்டமைப்பிற்கு சவாலாக மாறியிருக்கின்றது. இது எவ்வாறு சாத்தியப்பட்டது? தமிழ்த் தேசியப் பரப்பில் துரோகிகளாக தூக்கிவிசப்பட்டவர்களால் எவ்வாறு மக்கள் மத்தியில் தங்களை நிலைநிறுத்த முடிகின்றது? இது தமிழ்த் தேசியவாதிகள் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய முக்கியமான கேள்வியாகும்.

கிழக்கின் நிலைமைகள் வடக்கிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. ஆனால், கிழக்கிற்கான ஒரு பிரத்தியேக வேலைத்திட்டமோ ஆகக் குறைந்தது, கிழக்கின் நிலைமைகளை தமிழ்த் தேசிய நிலையில் கையாள்வதற்கான ஒரு கூட்டுச் செயற்பாடோ தமிழ்த் தேசியவாதிகள் என்போரிடம் இல்லை. முக்கியமாக கூட்டமைப்பின் இரண்டு அணுகுமுறைகளே கிழக்கில் ஏனைய தமிழ் கட்சிகளுக்கான வாய்ப்பை வழங்கியது.

முதலாவது, கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுத்து, முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சியமைத்தமை. இரண்டாவது, கடந்த ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவோடு மிகவும் நெருக்கமாக இருந்தும் கூட, கல்முனை உப பிரதேச செயலகப் பிரச்னையை தீர்த்துவைக்க முடியாமல் போனமை. இந்த இரண்டு விடயங்களும் கிழக்கில், முக்கியமாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில், கூட்டமைப்பின் மீதான அதிருப்தி அதிகரிக்கக் காரணமானது. ஒரு கட்சியின் மீது ஏற்படும் அதிருப்திகள்தான் ஏனைய கட்சிகளுக்கான வாய்ப்புக்களாகும். இந்த இடைவெளியில்தான் ஏனைய கட்சிகள் தங்களின் செல்வாக்கை அதிகரித்துக்கொள்கின்றன. ஒருவேளை கூட்டமைப்பு இம்முறை வெற்றியை தக்கவைத்தாலும் கூட, இனிவரப் போகும் காலத்தில் கிழக்கின் தமிழ்த் தேசியத் தளம் பெருமளவில் வீழ்சியடைப்போவது நிச்சயம்.

இந்த நிலைமைகளை யாழ்ப்பாணத்திற்குள் மட்டும் தமிழ்த் தேசியத்தை தேடுபவர்களால் எந்தளவு தூரம் விளங்கிக்கொள்ள முடிகின்றதென்பதில் பலமான சந்தேகமுண்டு. அரசியல்வாதிகள் ஏதோ கற்பனையில் இருக்கின்றார்களென்றால் தமிழ்த் தேசிய ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் என்போரும் 24கரட் கற்பனையில் இருக்கின்றனர். இவர்களில் அனேநகர், உரோம் எரியும்போது பிடில் வாசித்துக்கொண்டிருந்த நீரோ மன்னனுக்கு ஒப்பானவர்கள். மக்களின் பிரச்னைகளிலிருந்து அதிக தூரம் விலிகியிருக்கும் போது, தேசியக் கற்பனைகள் மட்டுமே எஞ்சியிருக்கும்.

# சிந்திக்கவும், வாக்களிக்கவும் தவறின் தவறானவர்களே பதவியைப் பிடிப்பர்

## சகலரையும் வாக்களிக்க கோருகிறது பேரவை

*யாழ்ப்பாணம், ஒக. 01*

*எமது தாயகம், மொழி, கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு, விழுமியங்கள் என்பவற்றின் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் பற்றுறுதி ஆழமானது. ஒரு தேசிய இனமாக தமிழ் மக்களின் தேசியம் சார்ந்த பற்றும் அரசியல் அறிவும் அரசியல்வாதிகளிலும் பார்க்க மேம்பட்டிருப்பதை பல சந்தர்ப்பங்களில் நாம் உணர்ந்திருக்கின்றோம் என தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.*

*தேர்தல் தொடர்பாக நேற்று அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அதில் ”எமது மக்கள் தமது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற அடிப்படை அபிலாஷைகளுக்காகவும், அதன் பால் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் தன்னார்வத்துடன் பல போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குறுகிய கால அவகாசங்களில் தமிழ் மக் கள் பேரவையால் அழைப்பு விடுக்கப்பட்ட கதவடைப்பு போராட்டங்களிலும் “எழுக தமிழ்” போன்ற பேரணிகளிலும் உணர்வு பூர்வமாக இணைந்து தமது முழு ஆதரவினை யும் வழங்கியிருந்தனர். அதே போன்று எமக்காக தம்மை அர்ப்பணித்தவர்களின் பெயரால் தேர்தல் அரசியல் கடந்து சில விடயங்களை சொல்கிறோம்.*

*தேர்தல் அரசியலால் நாம் பிளவுபடுவதோ, குழுக்களாக பிரிந்து நின்று முரண்படுவதோ ஆரோக்கியமாகாது. அழுத்தங்களாலும் சூழ்நிலைகளாலும் அறியாமையாலும் தடம் மாறி நிற்கும் மக்கள் நம்மவர்கள் அல்ல என்றும் ஆகிவிடாது. அவர்களை எதிரிகளாக நாம் உருவகிக்கவும் முடியாது. அவர்களையும் தடம் மாற்றி ஒற்றுமைப்படுத்தும் பாரிய பொறுப்பு நம்அனைவருக்கும் இருக்கின்றது.*

*ஒரு வலுவான கொள்கை அடிப்படையிலும் அந்த கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான செயற்பாட்டுத் தளத்திலும் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதை விடுத்து தங்களுக்குள் மோதிக் கொள்வதனை அனுமதிக்க முடியாது.*

*70 வருடங்கள் கடந்தும் தொடர்ந்து கொண்டிருக்கும் எமது துயரங்களுக்கு மேலதிகமாக தற்பொழுது மாறி வரும் அரசியல் சூழ்நிலைகளால் ஏற்படும் அழுத்தங்கள், கொவிட்19 எனப்படுகின்ற கொரோனாத் தொற்றினால் ஏற்பட்டுவரும் பாரிய பொருளாதார சமூக அழுத்தங்கள் என்பவற்றை எதிர்கொள்வது சம்பந்தமாக பல தரப்பட்டவர்களுடனும் தொடர்ச்சியாக நாம் கலந்தாலோசித்து வருகிறோம். இந்த கலந்துரையாடல்களிலே தேர்தல் அரசியல் கடந்து எமது அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒருங்கமைக்கப்பட்ட ஒற்றுமையான தளம் ஒன்றின் அவசியம் பலராலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.*


*இவற்றை வெற்றிகரமாக முன்னகர்த்த பொதுமக்களுடன் சேர்ந்து இயங்கக்கூடிய நேர்மையான விலைபோகாத அரசியல் பிரதிநிதிகள் எமக்கு அவசியமாகின்றது. அந்த வகையிலே எமது வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்தி பொருத்தமானவர்களை தெரிவு செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு எம் முன்னே எழுந்திருக்கிறது. அதற்காக பின் வரும் விடயங்களை கருத்தில் எடுக்குமாறு கேட்கிறோம். எமது அடிப்படை அரசியல் அபிலாஷை களான தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்றவற்றை தொடர்ச்சியாக நிராகரித்து நிற்கும் பேரினவாத கட்சிகளையும், அவற்றை தேர்தல் காலங்களில் மட்டும் உச்சரிக்கும் கட்சிகளையும், அவற்றினால் களமிறக்கப்பட்டிருக்கும் குழுக்களையும் முற்றுமுழுதாக நிராகரிப்போம். எமது வாக்குகளை தற்காலிக சலுகைகளுக்காகவும் வெகுமானங்களுக்காகவும் விற்பதை தவிர்ப்போம். இவ்வாறானவர்களுக்கு அளிக்கப்படும் வாக்குகள் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை பலவீனப்படுத்தி எமது இருப்பினையும் கேள்விக்குள்ளாகி விடும் என்பதனை உணர்ந்து கொள்வோம்.*

*எமது வாக்குகளை வீணடிப்பதற்காகவும் சிதறடிப்பதற்காகவும் திட்டமிட்டு பல குழுக்கள் களமிறக்கப்பட்டிருக்கின்றன. ஆசனங்கள் கிடைக்கும் சந்தர்ப்பம் அற்ற இக்குழுக்களுக்கு நாம் வாக்களிப்பதால் எமது வாக்குகள் விரயமாகும் என்பதை மனதில் நிறுத்துவோம். சிந்தித்து வாக்களிக்கக் கூடியவர்கள் வாக்களிக்கத் தவறின் பொருத்தமற்றவர்கள் எமது பிரதிநிதிகளாகும் ஆபத்து இருக்கிறது. எனவே தவறாது வாக்களிப்பதோடு மற்றவர்களையும் வாக்களிக்குமாறு ஊக்கப்படுத்துவோம்.*

*பொதுமக்களுடன் சேர்ந்து ஒற்றுமையாக உரிமைக்காக உழைக்கக்கூடியவர்களையும், சரியான கொள்கை நிலைப்பாட்டில் உள்ளவர்களையும் நேர்மையின் வழி நின்று மக்களுக்கு பொறுப்பு கூறக்கூடியவர்களையும் தெரிவு செய்ய தவறாது எமது வாக்குரிமையையும் மற்றும் மூன்று (03) விருப்பு வாக்குகளையும் பயன்படுத்துவோம்.*

*வாக்களிப்பதுடன் எமது கடமை முடிந்து விட்டது என்று எண்ணாது தேர்தல் அரசியலுக்கு அப்பால் எமது தேசத்திற்காக, அபிலாஷைகளுக்காக கலை கலாசார பொருளாதார மேம்பாட்டிற்காக ஒன்றுபட்டு உழைக்க உறுதி பூணுவோம். தெரிவு செய்யப்படும் எமது பிரதிநிதிகளை நெறிப்படுத்தி வழிப்படுத்தவும் ஆயத்தமாகுவோம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



தேர்தல் செய்திகள்

# பொதுஜன பெரமுன மட்டுமே சகல இனங்களையும் காக்கும்

## பிரதமர் மஹிந்த கூறுகிறார்



கொழும்பு, ஓக. 01

நாட்டில் உள்ள அனைத்துச் சமூகங்களையும் இனங்களையும் பாதுகாக்கும் ஒரே அரசியல் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யட்டிநுவர பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் பொதுஜன பெரமுனாவினால் பெரிய கட்சியாக உருவெடுக்க முடிந்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

கடந்த சில வாரங்களாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் குறித்து விவாதிக்கப்பட்டதாகவும், தேர்தலுக்குப் பின்னர் அவற்றைச் செயற்படுத்த அரசு தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கடன்களை வழங்குவதற்கும், வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்களுக்கும், சுயதொழில் செய்வோருக்கும் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை அரசு மேற்கொள்ளும் என்றும் மஹிந்த கூறினார்.

அத்தோடு தோட்ட உரிமையாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும், தேவையான நிபுணர்களின் உதவியும் வழங்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

# தூய்மையான அரசியலில் ஈடுபட்டு வருகிறார் சஜித்

## ரஞ்சித் மத்தும பண்டார புகழாரம்

சஜித் பிரேமதாஸ தூய்மையான அரசியல் செயற்பாட்டையே முன்னெடுத்து வருகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மஹிந்த ராஜபக்ஷ-ரணில் விக்கிரமசிங்க இணைந்து தங்களுக்கு சவாலை ஏற்படுத்தியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருக்கு எதிராகப் போலிக்குற்றச் சாட்டை முன்வைத்துள்ளனர்.

மத்திய கலாசார நிதியத்தில் இருந்து எடுக்கப்பட்ட பணம் நியாயமான முறையிலேயே செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதியம் தொடர்பான செயற்பாடுகளில் 11 பேர் ஈடுபட்டு வருகின்றனர்.

அதற்கமைய அதிலிருந்து பணம் எடுக்கப்பட்டால் இவர்களின் அனுமதியுடனே எடுக்க முடியும். இந்நிலையில் இந்தப் பணம் தொடர்பில் அப்போதைய நிதி அமைச்சர் உள்ளிட்ட 8 பேர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் பிரதமர், செயலாளர் ஆகியோர் மாத்திரமே கைச்சாத்திடாது இருந்துள்ளனர். இங்குதான் சதித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பணம் வீடுகள் அமைப்பதற்கோ வேறு எதற்கோ செலவிடப்படவில்லை. விகாரைகளின் திருத்தத்திற்கும், புத்தர்சிலைகள் அமைப்பதற்கும் மற்றும் தேவாலயங்களின் திருத்த வேலைப்பாடுகளுக்குமே பயன்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம்.

சஜித் பிரேமதாஸ என்பவர் ஏனையவர்களைப் போன்றவரல்லர், அவர் தூய்மையான அரசியல் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றார்-என்றார்.

# கட்சிகளின் கோரிக்கை; நிராகரித்த தேசப்பிரிய

கொழும்பு, ஓக. 01

எதிர்வரும் மூன்றாம் திகதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் கடந்த தினங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கட்சிகளின் செயலாளர்களினால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முழுமையாக முன்னெடுக்க முடியாது உள்ளதாக கட்சிகளின் செயலாளர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் மூன்றாம் திகதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் கோரிக்கைக்கு அனுமதி வழங்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

# அடுத்த கட்டத்தில் சஜித்தும் 'அவுட்'!



கொழும்பு, ஓக. 01

சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை இரண்டாவது கட்டமாக வெளியேற்றவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அடுத்த சில நாட்களில் இது பற்றிய அறிவிப்பு வெளியிடப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் 54 உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு கட்சியின் செயற்குழு அனுமதி அளித்திருந்தது. இந்த நிலையில் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களின் பட்டியலில் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்களின் பெயர்கள் இருக்கவில்லை.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் கருத்து வெளியிடுகையில், சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட வர்கள் இரண்டாவது கட்டமாக வெளியேற்றப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்.

# யானை கோட்டையை மொட்டு கைப்பற்றும்

## சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை

கொழும்பு, ஓக. 01

யானை சின்னத்தின் கொழும்பு கோட்டையை மொட்டு சின்னம் இம்முறை முழுமையாகக் கைப்பற்றும். ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் கொழும்பு மாவட்டத்தில் 30 சதவீத வாக்குகளைக்கூட பெறாது. நாடு தழுவிய ரீதியில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமோக வெற்றி பெறும்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரைகள் எதிர்வரும் 2ஆம் திகதியுடன் நிறைவு பெறும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டங்களை பொதுத்தேர்தல் கொள்கையாக்கியுள்ளோம். எமது தேர்தல் பரப்புரைகள் முழுமையாக இடம்பெற்றுள்ளன. அபிவிருத்திக்கான பொதுக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நாடு தழுவிய ரீதியில் அமோக வெற்றி பெறும். ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு கோட்டையை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி இம்முறை முழுமையாகக் கைப்பற்றும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறார்கள். இருவரும் 30 சதவீத வாக்குகளைக்கூடப் பெறமாட்டார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத்திட்டங்களைச் செயற்படுத்தும் அரசு தோற்றம் பெறுவது இன்றியமையாதது. நல்லாட்சி அரசு போன்று பயனற்ற அரசு தோற்றம் பெற்றால் பாரிய விளைவுகள் மீண்டும் தோற்றம் பெறும் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்- என்றார்.

# வளங்களை சூறையாடுபவர்களை மண்ணை விட்டு அகற்றவேண்டும்

## மணிவண்ணன் அழைப்பு



யாழ்ப்பாணம், ஓக. 01

தமிழ் இனத்திற்கு எதிரான குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகளை தண்டிக்கவேண்டும் என்றும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாலே எதிர்காலத்தில் எம்மினத்தின் மீது புரியப்படும் குற்றங்களைத் தடுக்க முடியும் என்றும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களுடைய மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவே நாம் அரசியல் களத்தில் புகுந்தோம். எங்களுடைய மண் பறிக்கப்பட்டு வந்த நிலையில் இன்று கல்வியும் பறிக்கப்பட்டு வருகின்றது. நான் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறும்போது 100 வீதம் தமிழ் மாணவர்களே கல்வி கற்றனர். ஆனால் இன்று எத்தனை சிங்கள மாணவர்கள் கற்கின்றார்கள்?

எமது கடல் வளமும் சூறையாடப்படுகிறது. எம்மிடம் இருந்து எல்லாமே பறிக்கப்பட்டு வருகின்றன. எம் இனத்தின் மீதான ஒடுக்குமுறைகளை இல்லாமல் ஒழிக்கவே எமக்கு அங்கீகாரம் தாருங்கள் என கேட்கிறோம். எமது வளங்களை சூறையாடுபவர்களை எம் மண்ணை விட்டு அகற்ற வேண்டும்.

வடமராட்சி தொடக்கம் மண் கும்பான் வரையில் மணல் கொள்ளையில் ஈடுபடுபவர்களை எம் மண்ணிலிருந்து அகற்ற வேண்டும் - என்றார்.



# தமிழர்களின் வாக்குகளை பிரிக்கவே மாற்று அணிகள்

## சுமந்திரன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஒக. 01

தமிழர்களின் நீண்டகால இலக்கை நோக்கி ஓர் அணியாக தமிழர்களைக் கொண்டு செல்லவேண்டும் என நாம் முயற்சித்துக்கொண்டுள்ள நேரத்தில் மாற்று அணியென கூறிக்கொண்டு தமிழர்களை ஏமாற்றும் நடவடிக்கைகளை ஒரு சிலர் முன்னெடுத்து வருகின்றனர். தமிழர்களின் வாக்குகளைப் பிரிக்க வேண்டும் என்பதுவும் தமிழர்களை பல வீனப்படுத்துவதும் மட்டுமே இவர்களின் நோக்கமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ சுமந்திரன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

தமிழர் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் இந்த நாட்டில் சிங்கள மொழியின் தொன்மையை போன்று தமிழும் தொன்மையான மொழியாகும். எமக்கென்ற தனியான மொழி, கலாசாரம் உள்ளது. நவீன உலகில் பயன்படுத்தக்கூடியதும் எல்லா பயன்பாடுகளுக்கும் உதவுகின்றதுமான முறையான முழுமையான மொழி எம்மிடத்திலும் உள்ளது. சர்வதேச சட்டத்தில் நாங்கள் சுய நிர்ணய உரித்துக்குரியவர்கள். அந்த உரிமையை உபயோகித்து எம்மை நாமே ஆளுகின்ற அரசியல் அமைப்பு முறைமையை கொண்டிருக்கின்றமையே எமது அரசியல் நிலைப்பாடு. எமக்கு ஆதரவு வழங்கிய தமிழ் மக்கள் இந்த நிலைப்பாட்டிற்காகவே வாக்களித்தனர்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக இலங்கைக்கு வழங்கிய மாகாணசபை முறைமையை நாம் முழுமையாக ஏற்றுகொள்ளாது போன சந்தர்ப்பத்தில் கூட , இருக்கின்ற மாகாணசபை முறைமையில் முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்குவதாக மூன்று தடவைகள் மஹிந்த இந்தியாவுக்கு வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். அதற்கமையவே 2011 ஆம் ஆண்டில் இருந்து 18 சுற்று பேச்சுக்களில் நாம் ஈடுபட்டிருந்தோம். ஆனால் அவர்கள் வாக்குறுதிகளை மீறி எம்மை அடக்கி ஆழ முயன்றது மட்டுமல்லாது தமது சொந்த மக்களையே அடக்கி ஆழ முயன்றதால்தான் தெற்கின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து ராஜபக்ஷ ஆட்சியை தோற்கடித்தோம். அதன் பின்னர் உருவாக்கிய நல்லிணக்க அரசில் நாம் அங்கத்தவராக இல்லாது போனாலும் ஆட்சியை உருவாக்கியதில் பெரும் பங்குள்ள அணியாக அவர்களை ஆதரித்தோம். அதன் மூலமாகவே அரசியல் ரீதியிலான வரைவொன்றை உருவாக்க முடிந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பற்றி பேசுவதே முக்கிய வேலையாக உள்ளது. அதேபோல் எமது கோரிக்கையான சமஷ்டி என்றால் நாடு பிரிந்துவிடும் என கூறுகின்றார். ஆனால் வேடிக்கை என்னவென்றால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயகதான் இந்த நாட்டுக்கு சமஸ்டியை அறிமுகப்படுத்தியவர். ஆகவே அவர் வரலாறுகளை மறந்து பேசக்கூடாது. மஹிந்த வேண்டுமென்றே சிங்கள மக்களை தவறாக வழிநடத்துகின்றார்-என்றார்.

# அரசியல் பழிவாங்கலுக்கு தீர்வுகளை வழங்குவோம்

## சஜித் பிரேமதாஸ உறுதி



கொழும்பு, ஒக. 01

நாங்கள் வெற்றிப் பெற்று முதல் ஆறு மாத காலத்திற்குள் அரசியல் பழிவாங்களுக்கு உள்ளானவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று தொலைபேசியைச் சுற்றி பெருந்தொகையான மக்கள் ஒன்றுக்கூடியுள்ளனர். எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சிறந்த வெற்றியை பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது. எமது ஆட்சியில் கிராம இராச்சியம், நகர ராச்சியம் செயற்திட்டத்தின் ஊடாக நாட்டின் அனைத்து பகுதிகளையும் அபிவிருத்தியடையச் செய்வோம்.

தற்போதைய அரசு ஒரு இலட்சம் அரச சேவையாளர்களின் தொழிலை பறிக்கவும், எஞ்சி இருப்பவர்களின் சம்பளத்தை அறவிடவும் திட்டமிட்டுள்ளது. இதற்காகவா அவர்களுக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்?

ஆட்சியை அமைத்தவுடனே இவர்கள் என்ன செய்தார்கள். ஓய்வூதிய கொடுப்பனவு, விசேட கொடுப்பனவு, இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட உணவு கொடுப்பனவு அனைத் தையும் இடைநிறுத்தினார்கள்.

பின்னர், வயோதிபர்களின் சேமிப்பு பணத்திலும் கைவைத்தார்கள். தற்போது வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

பொது மக்களிடம் பணம் இல்லை. மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றார்கள். இதற்கான தீர்வு என்ன? மொட்டு அணியினர் அதனை கூட தெரிவிக்கவில்லை.

உலகச் சந்தையில் எரிபொருள் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால், அரசு ஒரு வருடத்திற்கு எரிபொருளின் விலையை குறைப்பதில்லை என்ற தீர்மானம் எடுத்துள்ளது.

ஆனால், நான் ஆட்சிக்கு வந்தது 24 மணித்தியாலயத்திற்குள் எரிபொருள் விலையை குறைப்பேன். மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மின் கட்டணம் அறவிடமாட்டோம் என்றார்களே! அதனை செய்துள்ளார்களா?

மின் கட்டணம் தற்போது வீடுகளுக்கு வந்துள்ளது அல்லவா? அதனை பார்க்கும் போது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றதா?

கடந்த காலத்தில் எவ்வாறு கேட்டார்கள் தற்போது நலமா என்று? ஆனால், அது போன்று நாங்கள் கேட்கமாட்டோம். எமது ஆட்சியில் மார்ச் மற்றும் ஏப்பரல் மாத்திற்கான மின் கட்டணத்தை செலுத்தியவர்களின் பணத்தை மீள அவர்களுக்கே திருப்பி கொடுப்போம்.

நாளாந்தம் ஊதியத்திற்கு வேலை செய்பவர்கள், தோட்ட தொழிலாளர்கள், வாழ்வாதார பிரச்சினையை எதிர்நோக்கி வரும் சாதாரண மக்களுக்காக 20 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுக்கொடுப்பேன். நாங்கள் மின்கட்டணத்தை திருப்பி கொடுக்கும் போதும், எரிபொருள் விலையை குறைக்கும் போதும், இதனூடாக மக்களிடம் சேமிப்பு அதிகரிக்கும். அதற்கமைய வீழ்சியடைந்துள்ள பொருளாதாரம் மீள எழ ஆரம்பிக்கும்.

கடந்த கால ஆட்சியில் நான் கலாசார அமைச்சராகச் செயற்பட்டபோது, விகாரைகள் மற்றும் மதஸ்தலங்களின் வளர்ச்சிக்கான பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருந்தேன் - என்றார்.

# எமது வாக்குகளை யாரும் இல்லாமல் செய்யமுடியாது

## சவால் விடுகிறார் ரணில்



கொழும்பு, ஒக. 01

ஐக்கிய தேசிய கட்சியினால் மாத்திரமே நாட்டை காப்பாற்ற முடியும் எனக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சியில் இருந்து பிரிந்து சென்ற யாரும் உண்மையான ஐக்கிய தேசிய கட்சியினராக இருக்கமுடியாது.

ஐக்கிய தேசிய கட்சி அரசில் மாத்திரமே மூன்று வேளைகள் உண்ண முடியும். அதற்காகவே ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியினால் மாத்திரமே நாட்டைக் காப்பாற்ற முடியும். கடந்த எட்டு மாதங்களாக ஆட்சியில் உள்ள மொட்டு கட்சியினர் எதனைச் செய்தார்கள்.

நாட்டு மக்களுக்காக அவர்கள் எதனையும் செய்யவில்லை. வீழ்ந்திருக்கின்ற நாட்டை மீட்டெடுக்க அரசால் முடியாது. அது ஐக்கிய தேசிய கட்சியினால் மாத்திரமே சாத்தியமானது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு சிங்கள வாக்குகள் உள்ளன. முஸ்லிம்கள் வாக்குகள் உள்ளன. இதனை யாராலும் இல்லாமல் செய்ய முடியாது.

அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்ட கட்சி ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே. அதே போன்று அனைத்து நாடாளுமன்ற தேர்தல்களிலும் போட்டியிட்ட கட்சியும் ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே-என்றார்.

# சஜித் - ரணில் பிளவு திட்டமிட்ட நாடகம்

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஒக. 01

ரணில் - சஜித் பிளவென்பது பொய், மோசடி, ஏமாற்றமாகும். இது திட்டமிட்டு அரங்கேற்றப்படும் ஒரு நாடகமாகும். பொதுத்தேர்தலின் பின்னர் இருதரப்பினரும் இணைந்து கொள்வார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் புதிய ஹெல உறுமய கட்சியின் தலை வருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுவதால் பலரைக் கட்சிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியுள்ளது.

நீக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேலாகவும் நன்கு பரிசீலித்தோம். அதில் சஜித் பிரேமதாஸவின் பெயர் எங்கும் இல்லை. ரணில் - சஜித் பிளவு என்பது பொய்யான விடயம். இவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி காரணமாக ரணில் மீது நம்பிக்கை இழந்த ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்காளர்கள் சஜித் பிரேமதாஸவுக்கு தமது வாக்குகளை வழங்குவார்கள். சஜித்தின் நகைச்சுவை நாட கத்தால் ஏமாற்றமடைந்தவர்கள் ரணிலுக்கு வாக்குகளை வழங்கு வார்கள்.

இருவரும் ஒன்றாக இணைந்து உறுப்பினர்களின் வாக்குகளைச் சேகரிப்பதன் மூலம் தேர்தலுக்குப் பின்னர் இரு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் சதித்திட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்- என்றார்.

# பலமான ஓர் எதிர்க்கட்சி உருவாகுவது அவசியம்

## வலியுறுத்துகிறார் அநுரகுமார

கொழும்பு, ஒக. 01

நாடாளுமன்றத்தில் பலமிக்க எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்க வேண்டும். இது மிகவும் அவசியமாகும். எனவே, ராஜபக்ஷக்களை எதிர்ப்பவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலின் பின்னர் நாட்டின் நாடாளுமன்றத்தில் மக்களுக்கு அசாதாரணத்தை ஏற்படுத்தும் தீர்மானங்கள் கொண்டுவரப்படும்போது அதற்கு எதிராகக் குரல் கொடுக்க பலமிக்க எதிர்க்கட்சியொன்று உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறான பலமிக்க எதிர்க்கட்சியொன்றை ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித் பிரேமதாஸவால் ஒருபோதும் உருவாக்க முடியாது. எம்மால்தான் உருவாக்க முடியும் - என்றார்.

# சிறைக்குள் போதைப்பொருள் வீசியவர் கைது



கொழும்பு, ஓக. 01

சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் வீசிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

பொலனறுவை சிறைச்சாலைக்குள் கஞ்சா மற்றும் புகையிலையை வீசிய வரே கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் முற்பகல் 11.30 மணியளவில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலனறுவை பகுதியை சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார்.

# இயக்கச்சியிலிருந்து 166 பேர் விடுவிப்பு

கிளிநொச்சி, ஓக. 01

கிளிநொச்சி இயக்கச்சியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 166பேர் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஜோர்தான் நாட்டில் தங்கியிருந்த நிலையில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் இயக்கச்சியில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டிருந்த நிலையில் நேற்று விடுவிக் கப்பட்டனர்.

தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்ய இவர்கள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதி செய் யப்பட்டதை அடுத்து நேற்று சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# ஐ.தே.க.வில் இருந்து மேலும் 37 பேர் நீக்கம்

கொழும்பு, ஓக. 01

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைத்திருந்த மேலும் 37 உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்கிழமை இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக அந்தக் கட்சியிலிருந்து விலகி எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் 54 பேரினதும், கட்சியிலிருந்து விலகி அல்லது கட்சியின் கொள்கைகளுக்கு முர ணாக செயற்படும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் 61 பேரினதும் - உறுப் புரிமை இரத்துச்செய்யப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டது.

உறுப்புரிமை இரத்துச் செய்யப் பட்ட அனைவருக்கும் அது தொடர் பான கடிதம் கடந்த புதன்கிழமை உத்தி யோகபூர்வமாக அனுப்பிவைக்கப்பட் டது.

இந் நிலையிலேயே தற்போது மேலும் 37 உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

# பொதுத்தேர்தல் முடிந்தாலும் ஊரடங்கு அவசியம் இல்லை

## அமைச்சர் விமல் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 01

2020 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தல் முடிந்ததும் ஊரடங்கு உத்தரவு விதிக்கவேண்டிய அவசியமில்லை என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித் துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், தேர்தலுக்குப் பின்னர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களை நிராகரிப்பதாகக் கூறினார்.

நாட்டில் விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்படவேண்டிய நேரத்தில் ஊரடங்கு உத்தரவு விதிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு வெளிநாடுளில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளே இடம்பெறும் என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

# வாளைக் காட்டி அச்சுறுத்தி நகைகள் நேற்றுக் கொள்ளை

## உரும்பிராய் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 01

உரும்பிராய் பகுதியில் வீட்டில் இருந்தவர்களைத் தாக்கி வாளைக் காட்டி அச்சுறுத்தி நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் மேற்கு, சோளம் தோட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றி லேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வீட்டின் பின்பக்கமாகச் சென்ற நபர்கள் வீட்டின் கதவை உடைக்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது சத்தம் கேட்டு வீட்டின் குடும்பஸ்தர் வெளியில் வந்துள்ளார்.இதன்போது கொள் ளையர்கள் அவரைக் கம்பியால் தாக்கியதுடன் வீட்டில் இருந்தவர் களை வாளைக் காட்டி அச்சுறுத்தி யுள்ளனர். அத்துடன் வீட்டில் இருந்த நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதன்போது அந்த வீட்டில் இருந்த வர்கள் அவலக் குரல் எழுப்பினர். அயலவர்கள் ஓடி வந்தபோதும் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள் ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரனைகளை முன் னெடுத்துள்ளனர்.

# வவுனியா விபத்தில் முதியவர் சாவு

வவுனியா, ஓக 01

வவுனியா உளுக்குளம் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் பரிதாபமாக உயிரி ழந்தார்.

வவுனியாவிலிருந்து செட்டிகுளம் நோக் கிப் பயணித்த பஸ் உளுக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, வீதியால் சைக்கிளில் பயணித்துக்கொண் டிருந்த முதியவருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். விபத்து தொடர்பாக உளுக்குளம் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.

# இருபாலை தெற்கு மக்களுக்காக குடிதண்ணீர்த் திட்டம் கையளிப்பு





யாழ்ப்பாணம், ஓக. 01

இருபாலை தெற்கு ஞான வைரவர் கோயிலடி பிரதேச மக்களுக்காக 25 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக் கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்திட்டம் நேற்று அந்தப் பகுதி மக்களிடம் கையளிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவின் இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஞானவைர வர்கோயிலடி கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவந்தனர்.

இப்பகுதிமக்களின் குடிதண்ணீர்ப் பிரச்னையை தீர்ப்பதற்கு அப்பகுதி மக்களின் பிரதேசசபை உறுப்பினர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் எடுத்த முயற்சியின் பயனாக சமுகநீர்வழங்கல் திணைக்களத்தின் 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தக் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கப்பட்டது.

இதனை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது.

தேர்தல் திணைக்களம்,மாவட்ட அரச அதிபர்,பிரதேசசெயலர் ஆகியே-ாரின் அனுமதியுடன் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதேச நீர்ப் பாவணையாளர் சங்கத் தலைவர் பாக்கியராசா பிரதீபன் தலைமை தாங்கினார்.

சமூகநீர் வழங்கல் திணைக்கள மா-காணப் பொறியியலாளர் க.நிஜாந்தன் கலந்து கொண்டு குடிதண்ணீர் விநியோ-கத் திட்டத்தை ஆரம்பித்து மக்களிடம் கையளித்தார்.

சமூகநீர் வழங்கல் திணைக்கள மாவட்ட பொறுப்பதிகாரி த.பிரசாந் ,சமூகநீர்வழங்கல் திணைக்கள மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யு.அன்ரன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள்,ஞான ஒளிசனசமூகநிலைய நிர்வாகத்தினர்,பிரதேசமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உரிமையை நிலைநாட்ட சகலரும் வாக்களியுங்கள்

## ரட்ணஜீவன் கூல் அழைப்பு



கொழும்பு, ஓக. 01

உங்களது உரிமையை நிலைநாட்ட அனைவரும் வாக்களிக்க வேண்டும் என தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நிலைப்பாடு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் தேதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கொரோனா தொற்று அச்சம் காரணமாக மக்கள் வாக்களிப்பதற்கு தயங்குகிறார்கள் அல்லது பயப்படுகிறார்கள் என்ற நிலைமை காணப்படுகின்றது. உண்மையில் மக்கள் இது தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை.

நாங்கள் வாக்களிப்பின் போது கொரோனா தொற்று தடுப்புக்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். எம்மைப் பொறுத்தவரை ஏற்கனவே சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி எவ்வாறு வாக்களிப்பை மேற்கொள்வது தொடர்பாக மாதிரி வாக்களிப்பைப் பரீட்சித்துப் பார்த்திருக்கி றோம்.

தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடியில் வாக்களிப்பின் போது கொரோனா தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு குறைவானதாகவே இருக்கும். அதாவது நீங்கள் வீதியில் பயணிக்கும்போதோ அல்லது தங்களுடைய அன்றாடக் கடமைகளைச் செய்யும் போதோ கொரோனா தோற்று ஏற்படுகின்ற வாய்ப்பை விட வாக்களிப்பு நிலையத்துக்குள் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக் கூறு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

அத்தோடு நீங்கள் வாக்களிப்பு நிலையத்துக்குள் செல்லும்போது மாஸ்க் அணிந்து கைகளைக் கழுவி ஏனையோர் பாவித்த பேனைகளைப் பாவிக்காத வகையில் பல சுகாதார நடைமுறைகளை வாக்களிப்பு நிலையங்களில் மேற்கொண்டுள்ளோம்

வீதிகளில் நடமாடும் போது ஏற்படும் தொற்றுக்குரிய வாய்ப்பை விட வாக்களிப்பு நிலையத்தில் மிகவும் குறைவானது. எனவே உங்களுக்குரிய வாக்களிப்பு உரிமையை சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்- என்றார்.



# ஜப்பான் தூதரகத்தின் ஆலோசகர் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு!

கொழும்பு, ஓக. 01

இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் ககு புக்கோரா கடற்படைத் தலைமையகத்தில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுக்கேதென்னவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இலங்கைக் கடற்படையின் 24 ஆவது தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுக்கேதென்னவுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்த அவர், இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கடற்படைத் தளபதியுடன் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் கடற்படைத் தளபதி மற்றும் இலங்கையில் ஜப்பான் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் காகு புக்கோரா ஆகியோருக்கு இடையே நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

# அலி ஸாஹிர் - ஹாபிஸ் ஆதரவாளர்கள் மோதல்

மட்டக்களப்பு, ஓக. 01

மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கிடையே பரஸ்பர தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக

ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

அலி ஸாஹிர் மௌலானா மற்றும் ஹாபிஸ் நஸீர் அஹமட் ஆகிய இரு

வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கிடையே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு தரப்பினரின் வாகனம் ஒன்றின் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மற்றைய அணியினரின் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவங்களில் இரண்டு வாகனங்கள் சேதமடைந்துள்ளன. இது தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் எட்டு பேர் தேடப்பட்டுவருகின்றனர் எனப் பொலிஸார் கூறினர்.

# ‘ஆசியாவின் ஆச்சரியம்’ மீள கட்டியெழுப்பப்டும்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் ஆசியாவின் ஆச்சரியம் என்ற நிலையில் பொருளாதாரம் மீள கட்டியெழுப்பப்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தில் பொருளாதார ரீதியிலும் அரசமைப்பு ரீதியிலும் பாரிய நெருக்கடிகள் காணப்படுகின்ற நிலையில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் தமது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று நிலையான அரசாங்கத்தை அமைக்கும்.

ஆகவே நாட்டுக்கு பயனற்ற அரசமைப்பினை திருத்தம் செய்ய வேண்டும் என்றும் நாட்டுக்கு பொருந்தும் விதத்தில் அரசமைப்பினை உருவாக்க வேண்டும் என் பதே எமது பிரதான எதிர்பார்ப்பு - என்றார்.

# தேர்தல் நாட்களில் ‘பார்’களுக்கு பூட்டு

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு இரண்டு நாட்கள் அனைத்து மதுபானசலைகளும் மூடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்களிப்பு தினமான 5 ஆம் திகதியும் வாக்கென்னும் தினமான 6 ஆம் திகதியும் இலங்கையில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே குறித்த இரு நாட்களும் நாடு பூராகவும் உள்ள சகல மதுபான நிலையங்களும் மூடப்படவுள்ளதாக திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# அழித்தவர்களிடமே நியாயம் கேட்கலாம் அதனாலேயே சுதந்திர கட்சியில் சேர்ந்தேன்

## இப்படி சொல்கிறார் விண்ணன்

யாழ்ப்பாணம், ஓக. 01

தமிழீழ விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் இல்லாமல் அழித்ததில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு நேரடி பங்களிப்பு உள்ளது என்று அக் கட்சி சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் விண்ணன் என்று அழைக்கப்படும் பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் ஒப்புக் கொண்டுள்ளார்.

அழித்தவர்களிடம் நியாயம் கேட்பதே சிறந்தது என்ற அடிப்படையிலேயே அந்த கட்சி சார்பில் தான் தேர்தலில் களமிறங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் ஊடகவியலாளர் சந்திப்பு நடந்தது.

இதன் போது கருத்து தெரிவித்த அவர்,

தமிழீழ விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் நரி தந்திரத்தின் ஊடாக ஐக்கிய தேசிய கட்சி அழித்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நேரடியாகவே செயற்பட்டு வருகின்றது என்றார்.

இதன் போது அங்கிருந்த ஊடகவியலாளர்களால் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி விடுதலைப் போராட்டத்தை நேரடியாக அழித்தது என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா என்று கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த அவர், “ஆம். விடுதலைப் புலிகளை அழித்ததில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நேரடியாக செயற்பட்டது. ஒரு பொருளை நாங்கள் எங்கு தொலைத்தோமோ அங்குதான் அந்த பொருளை தேட வேண்டும். இதனால்தான் அழித்தவர்களிடமே நியாயம் கேட்கவும், எமக்கு தர வேண்டியதை கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் அதே கட்சியில் தேர்தலில் களமிறங்கியுள்ளேன்.

நான் இவ்வாறு சொல்வதால் கட்சிக்குள் எனக்கு எதிரான கருத்துக்களோ, நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்பட்டால் அதை பற்றி நான் கவலைப்படப்போவதில்லை. உண்மைகளை சொல்லியே நான் அரசியலுக்கு வந்துள்ளேன். எனது எதிர்பார்ப்பு என்னவென்றால் தமிழ் மக்கள் இம்முறை பாராளுமன்றத்திற்கு புது முகங்களை அனுப்ப வேண்டும். பழையவர்களால் எந்த பயனும் இல்லை என்பதை மக்கள் நன்கு புரிந்துவிட்டார்கள்.” என்றார்.

# துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்; நடவடிக்கை எடுக்கிறது பொலிஸ்

வவுனியா நகரப் பகுதிகளில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேட்சை குழுக்களின் தேர்தல் பரப்புரை துண்டுப்பிரசுரங்களை வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கும் ஆதரவாளர்கள், வேட்பாளர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தேர்தல் பரப்புரை துண்டுப்பிரசுரங்களை வர்த்தக வியாபார நிலையங்கள் வங்கிகளுக்கு விநியோகிப்பவர்களுக்கு கொரோனா நோய் இனம் காணப்பட்டால் அவர்கள் சென்ற வர்த்தக நிலையங்கள் வங்கிகள் என நகரை முழுமையாக முடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகிறது.

இதை கவனத்திற்கொண்டு பொலிஸார் அவர்களுக்கு எதிராக நடவடிக்கையை மேற்கொண்டு வருவதுடன் அவர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து அவர்களுக்கு தற்போதைய நிலைமைகளை தெளிவுபடுத்தி வருவதுடன் அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்து அவர்களுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் வவுனியா நகரப் பகுதியில் வியாபார நிலையங்களுக்கு தேர்தல் பரப்புரை துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வந்த சிலர் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் 2020

## எனது அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!
## எனது அன்புக்குரிய வர்த்தகப் பெருமக்களே!

**நான் ஒரு வர்த்தகராக இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய காரணம்**

* ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் வட பகுதியை பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலமாக எமது தேசத்தைக் கைப்பற்றியதன்மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய்களை எமது தேசம் இழந்து நிற்கின்றது.

  இறுதி யுத்தத்தை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்று, பல்லாயிரம் உயிர்களை இழந்து நிற்கும் எமது சமூகத்திற்கு ஒரு தீர்வைக் கொடுக்கவேண்டிய கட்சியாக இந்தக் கட்சி இருக்கின்றது.
* எமது தேசத்தில் காணாமல் போனோர் மற்றும் யாழ்.குடாநாட்டில் 2006 தொடக்கம் 2009 காலப்பகுதி யில் சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்கள் விவரங்களைத் திரட்டி அதற்கொரு ஆணைக்குழுவை அமைத்து, விசாரணை செய்யப்படவேண்டும்.
* தமிழீழ வைப்பகத்தில் வைப்பிலிடப்பட்ட பல்லாயிரம் கோடி தங்க நகைகளை மீளளித்தல் அல்லது அதற்குரிய நஷ்டஈட்டை அரசு வழங்க வேண்டும்.
* மயிலிட்டித் துறைமுகத்தை அப்பகுதியைச் சார்ந்த கடற்தொழிலாளர் சமுதாயத்திடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
* இராணுவம் அபகரித்து வைத்திருக்கும் தனியார் காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
* அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு முற்றுமுழுதான அபிவிருத்தித் திட்டம் கொண்டுவரப்படல் வேண்டும்.
* எங்கள் பிரதேசத்தில் இருக்கும் அனைத்து வர்த்தகர்களின் ஒற்றுமையுடன் பங்குதாரர்களாக பல நிறுவனங்களை ஆரம்பித்து, 4 வீத வட்டி கடன் 20 ஆண்டுகால அடிப்படையில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பைக் கொண்ட பல தொழிற்சாலைகளை அமைத்து, இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கவேண்டும்.
* இவைகள் யாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய இந்தக் கட்சியிலேயே எங்களுக்கு கிடைக்க வேண்டிய சகல உரிமைகளையும் முதலீடுகளையும் அழிவுகளுக்குக் கிடைக்கவேண்டிய நஷ்டஈடுகளையும் நாடாளுமன்றத்தில் பேசிப் பெறுவதற்காகவே எனக்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு தயவாக வேண்டி நிற்கின்றேன்.
* என் அன்பான வர்த்தக மற்றும் வாக்காளப் பெருமக்களே! தற்போதைய சூழலில் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காததையிட்டு மனம் வருந்துகின்றேன். தேர்தல் முடிந்த பின் 60 நாள்கள் நான் இந்த மாவட்டத்திலே தங்கியிருந்து உங்கள் எல்லோரையும் சந்தித்து, உங்கள் பிரச்னைகள், தேவைகள் பற்றிய சகல விபரங்களையும் அறிந்து நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்று, அதற்குரிய தீர்வை எடுப்பேன் என்றும் உங்களுக்கு உறுதிபடக் கூறுகின்றேன்.



**கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் வெற்றி இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!**

**ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எமது மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கும் உரிமைகளுக்கும் வித்திடுங்கள்.**

# விண்ணன்
## ப.வரதராஜசிங்கம்



'உங்கள் வாக்கு உங்கள் உரிமை சரியான முறையில் வாக்களியுங்கள்!'

**தமிழ்த் தேசியமும் தமிழ்த் தாயும் வாழ்க!**



X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ✗ | 2 | 3 | 4 | 5 ✗ | 6 | 7 | 8 | 9 | 10 |

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinnan05

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : பீட் பொக்ஸ்
11.00 மணி : மைதானம்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
அஜித் மற்றும் லைலா நடித்த தீனா



4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை?



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி மற்றும் செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
ஆர்.ஜே பாலாஜி மற்றும் ப்ரியா ஆனந்த் நடிப்பில் எல்.கே.ஜி
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN இசை

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்ரஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - தமிழ்
8.15 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) மறு ஒளிபரப்பு
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்

4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : உயர்தரம் கணிதம் விஞ்ஞானப்பிரிவு

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நல்லூர் கந்தன் 7 ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு



10.00 மணி : நல்லூர் கந்தன் 8 ஆம் நாள் காலைத் திருவிழா நேரலை
11.30 மணி : பக்திமலர்

**பகல்**
12.30 மணி : திருவிழா
4.30 மணி : நல்லூர் கந்தன் 8ஆம் நாள் மாலைத் திருவிழா நேரலை

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : நல்லூர் கந்தன் 8ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப் பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத் திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருகோணமலைத் திருப்பலி

Pirai Television

**காலை**
6.00 மணி : தர்ஜீமத்துல் குர்ஆன்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இறை தென்றல்
8.00 மணி : குத்துபா பிரசங்கம்
8.30 மணி : அல் உழ்கிய்யா
9.30 மணி : ஹஜ் ஆவணப்படம்
10.00 மணி : சிறப்பு நேரலை வாழ்த்து நிகழ்ச்சி
12.00 மணி : பிறை பிரசங்கம்

**பகல்**
1.00 மணி : சிறப்பு திரைப்படம்
3.00 மணி : இசை மழை
4..00 மணி : குட்டீஸ் ஈத் கொண்டாட்டம்
5.00 மணி : கவிதாரங்கம்
6.00 மணி : பத்தாம் பிறை கலந்துரையாடல்

**இரவு**
7.00 மணி : யார் இவர்?
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.08.2020 அன்று வெளியிடப்பட்டது.